ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்களின் நேர்முக உதவியாளரின்

செயல்முறைகள், சென்னை–5.

முன்னிலை: திரு சு.பார்த்திபன், B.Sc.,

ந.க.எண். இ6/5897/2002 நாள்.09.05.2023.

பொருள்: பணியாளர் தொகுதி– கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு திருவள்ளூர் மாவட்டம் – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகம் – இளநிலை உதவியாளர் – திருமதி.செ.முத்து என்பவரது பணியினை வரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை: அரசாணை (ப) எண்.103, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந7) துறை, நாள். 21.04.2023.

&&&&&

ஆணை:

பார்வை 1–இல் காணும் அரசாணையில் ஆதிதிராவிடர் நலத்துறையில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு, திருவள்ளூர் மாவட்டம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திருமதி.செ.முத்து என்பவருக்கு, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவுகள் 15 (பணி நியமனத்திற்கு முன்பு திருமணமான பெண்) மற்றும் பணப்பலன்கள் பணி நியமன நாள் முதல் வழங்க மேற்காணும் சட்டப் பிரிவு 28(2) ஆகியனவற்றை தனியர் பொருட்டு தளர்வு செய்யப்பட்டு அப்பணியிடத்திற்கான உடற்தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் எனும் நிபந்தனைக்குட்பட்டு, அன்னாரது பணியினை அவர் பணியேற்ற நாளான 05.02.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

இவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால் திருமதி.செ.முத்து, இளநிலை உதவியாளர் என்பவர் ஆண்டு ஊதிய உயர்வு பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

ஆதிதிராவிடர் நல இயக்குநரின்
நேர்முக உதவியாளர்

பெறுநர்.

திருமதி.செ.முத்து,
இளநிலை உதவியாளர்,
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகம்,
திருவள்ளூர் மாவட்டம்.

(மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மூலம் தனியருக்கு சார்வு செய்யும் பொருட்டு).